உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.71/2024

பெயர் :சரவணகுகன்
தகப்பனார் பெயர் :சேதுராமலிங்கம்
கணவர் பெயர் :
வயது :40
கிராமம் :மேலூர்
வட்டம் :மேலூர்
தொழில் :லாரி டிரைவர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.04.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் மீது நான் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த விபரங்கள் தெரியும். 10.01.2023 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில், ஐவைத்தான்பட்டியில் என் தம்பி தீபன் சக்கரவர்த்தி அவருடைய அப்பா செல்வமணியிடம் காம்பவுண்ட் சுவரை அநியாயமாக கட்டிக்கொண்டிருக்கிறார்களே என்று கேட்டார். தீபன் சக்ரவர்த்தி என் சித்தப்பா மகன் ஆவார். என் சித்தப்பா பெயர் செல்வமணி ஆஜர் 3வது எதிரி என் சித்தப்பாவுடைய அண்ணன் ஆவார். 1,2 ஆஜர் எதிரிகள் 3வது எதிரியின் மகன்கள் ஆவார்கள். ஆஜர் 3வது எதிரி அப்போது அசிங்கமான வார்த்தைகளால் என் சித்தப்பா செல்வமணியையும், தீபன் சக்ரவர்த்தியையும் அவதூறாக பேசிக்கொண்டிருந்தார். அபிமன்னன் பேசிக்கொண்டே அவர் வீட்டிற்குள் சென்று அரிவாளை எடுத்து வந்தார். சாட்சியிடம் அரிவாள் ஒன்று காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு அந்த அரிவாளை தான் 3வது எதிரி எடுத்துவந்ததாக சொல்லியதன் பேரில் அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1வது எதிரி காட்டில் இருந்து வந்தவாறே 3ம் எதிரி கையில் இருந்த அரிவளை பிடிங்கி என்னை உச்சந்தலையில் நடுமண்டையில் ஓங்கி வெட்டிவிட்டான். ஆஜர் 3வது எதிரி அருகில் இருந்த பைப்பை கொண்டு என்னுடைய இடது புற விலா எலும்பில் அடித்துவிட்டார். நான் உட்கார்ந்தவாறே என் கைப்பேசியில் இருந்து நானே

100க்கு தகவல் கொடுத்தேன். அவர்கள் மூலமாக கருங்காலக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டேன். அதன்பின்பு என்னை மேல்சிகிச்சைக்காக அரசு ராசாசி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். புகார் வாக்குமூலம் சாட்சியிடம் காட்டப்பட்டு, அது தான் தான் கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் 10.01.2023 அன்று கொடுத்ததாக சொன்னதன் அடிப்படையில் மேற்படி புகார் வாக்குமூலமானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 நாட்கள் மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் மீண்டும் வந்தபிறகு ஆஜர் எதிரிகள் என் அப்பாவிடம் சண்டையிட்டார்கள். மீண்டும் வாக்குமூலத்தை காவல்நிலையத்தில் கொடுத்தோம். வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை :

செல்வமணி என் தாய் வழியில் சித்தப்பா ஆவார். எனக்கு தாய், தந்தை கிடையாது செல்வமணி தான் என்னை வளர்த்து வருகிறார். எனக்கு திருமணம் முடித்து கொடுத்ததும் அவர் தான். செல்வமணி எனக்கு தாய்வழியில் சித்தப்பா என்ற விபரத்தை எனது புகார் வாக்குமூலத்திலோ, 161 வாக்குமூலத்திலோ சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அவர்கள் என்னை வளர்த்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன். என் தம்பி தீபன் சக்ரவர்த்தியும், என் சித்தப்பா செல்வமணியும், எவ்வாறு காம்பவுண்ட் சுவர் எழுப்பினார்கள் என்று கேட்ட போது, 3வது எதிரி சண்டைக்கு வந்துவிட்டார். எதனடிப்படையில் 3வது எதிரி அசிங்கமாக பேசினார் என்றால் தீபன் சக்ரவர்த்தி எதற்காக சுற்றுசுவரை கட்ட அனுமதித்தீர்கள் என்று செல்வமணியிடம் கேட்டுகொண்டிருந்த போதே ஆஜர் 3வது எதிரி அசிங்கமாக பேசி வந்துவிட்டார். என் வீட்டிற்கு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். என் வீடும் என் தம்பி வீடும் ஒன்றுதான். சம்பவம்

நடந்தது சுமார் மாலை 5.45-6.00 மணிக்குள்ளாக இருக்கும். என்னுடைய முதல் விசாரணையில் சம்பவம் நடந்தது மாலை சுமார் 5.30 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய புகாரிலும், நான் காவலர்களிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் சம்பவமானது மாலை சுமார் 7.00 மணியளவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் சண்டை நடந்தது மாலை சுமார் 5.45-6.00 மணிக்குள்ளாக தான் நடந்தது. காவலர்கள் வந்தது 7.00 மணி இருக்கும். நான் என்னுடைய புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1 ஆவணத்திலும் காவலர்கள் கொடுத்த வாக்குமூலத்திலும் காவலர்கள் 7.00 மணிக்கு வந்த விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலமானது 11.01.2023 அன்று கொடுக்கப்பட்டது. நானும், என் அப்பா, மற்றும் என் அம்மா மூவரும் சம்பவம் நடந்த மறுநாள் அரசு மருத்துவமனையில் இருந்து எங்கள் ஊருக்கு வந்து விட்டோம் அதன்பின்னர் தான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். 11.01.2023 அன்று நானும், என் அப்பா, அம்மாவும், ஊருக்கு வந்தவுடன் காவல்துறை அழைத்து சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்த விபரத்தை என்னுடைய புகார் வாக்குமூலத்திலோ, காவல்துறை விசாரணையிலோ சொன்னேனாஎன்றால் சொல்லியிருக்கிறேன். 100க்கு நான் தகவல் சொன்னேன் என்ற விபரத்தை புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் அதுபற்றி தெரியவில்லை. அதை எழுதினார்களா என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். என் வளர்ப்பு அப்பா கேட்டதற்கிணங்க அ.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. 10.01.2023 அன்றுகாவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டதாக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியிருந்தால் தவறா என்றால் முதல் நாளே என் அப்பா புகார்

வாக்குமூலம் கொடுக்க காவல்துறைக்கு சென்றுவிட்டார். சம்பவம் நடக்கும் போது நான், ஸ்ரீவர்சன், தீபன் சக்ரவர்த்தி, செல்வமணி, திலகம், பக்கத்துவீட்டுகாரர்களும் பார்த்து கொண்டிருந்தார்கள். பக்கத்துவீட்டுகாரர்களான கவிச்சந்திரன், மற்றவர்கள் தெரியவில்லை. எல்லோரும் பார்த்து கொண்டிருந்தாகள். பக்கத்துவீட்டுகாரர்களுடன் நாங்கள் பேசிக்கொள்வதில்லை. 2வது எதிரி வெற்றிவேல் தான் எல்லார் மீதும் கருங்கல்லைவிட்டு எறிந்தார். கல் பட்டு யாருக்கேனும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. ஆஜர் 2வது எதிரி தான் கல்லை கொண்டு எறிந்தார் என்ற விபரத்தை புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1லோ, காவல்துறை விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் கல்லைக்கொண்டு எறிந்தார்கள். கருங்காலக்குடி, அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு, அதன்பிறகு மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். 2 நாட்கள் மட்டுமே நான் சிகிச்சை எடுத்துகொண்டேன். முதல் நாள் சேர்த்தார்கள் மறுநாள் நானாகவே வந்துவிட்டேன். ஏனென்றால் எங்கள் வீட்டில் பிரச்சினையை மீண்டும் இழுத்தார்கள் அதனால் நானாகவே வந்துவிட்டேன். அ.சா.ஆ.1ல் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் நான் வருவதற்குள்ளாகவே அனைவரையும் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள். 11.01.2023 அன்று மதியம் சுமார் 3.00 மணிக்குள்ளாக காவலர்கள் அழைத்து சென்றுவிட்டார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், என் சித்தப்பாவுக்கும், ஏற்கனவே ஆஜர் எதிரிகளுக்கும்இடையே நடக்கும் இடப்பிரச்சினை தொடர்பாக என்னை பயன்படுத்தி பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், அதனால் தான் நான் மருத்துவமனையில் இருந்து சொல்லிக்கொள்ளாமல் ஓடிவந்துவிட்டேன்

என்றால் சரியல்ல. அதை மறைத்து மருத்துவமனையில் இருந்து விடுவித்ததாக நான் பொய் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் முன்னுக்கு பின் முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.த.கு.வி : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.04.01 17:30:30 +0530

Assistant Sessions Judge

Melur